24-7-1991

# ஆனையிறவுடனான இராணுவ தொடர்புகள் துண்டிப்பு

(கொழும்பு)
கொழும்பு இராணுவத் தலைமைப்பீடம், கட்டைகாடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் ஆகியோருக்கும் ஆனையிறவு முகாமினுள் முடங்கியுள்ள இராணுவத்தினருக்குமிடையில் சகலதொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 8 இதழ்: 163
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-7-1991

## 101 படையினர் பலி
## அரசு அறிவிப்பு

(கொழும்பு)
ஆனையிறவு முகாம் தகர்ப்பு தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே இரு வாரங்களாக நடைபெற்ற யுத்தத்தில் 101 படையினர் கொல்லப்பட்டதாகவும் நேற்று முன்தினம் மட்டும் 12 படையினர் பலி

[4-ம் பக்கம் பார்க்க]

## மக்கள், பார்வைக்கு வைக்கப்பட்ட சடலங்கள்

(யாழ்ப்பாணம்)
புல்லாவெளி, முள்ளியான் பகுதிகளில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஐம்

[4-ம் பக்கம் பார்க்க]

### ஆனையிறவு நிலைமையை தெரிவிக்கக் கோரி

# இராணுவத்தினரின் உறவினரால் ஜனாதிபதி மாளிகை முற்றுகை!

## கூட்டத்தை கலைக்க பொலிஸார் தடியடி

(கொழும்பு)
வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் கடமையாற்றும் சிறிலங்கா படைகளின் பெற்றோர்கள், மனைவியர், உறவினர்கள் தமது கணவன்மார், பிள்ளைகள் ஆகியோரின் நிலைமையைத் தெரிவிக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய தடியடிப் பிரயோகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள ஜனாதிபதிமாளிகையின் முன்னால் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் உறவினர்கள் பலத்த குரலில் ஆர்ப்பாட்டம் செய்ததாக கொழும்பிலிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 29 இராணுவ சடலங்கள் நேற்று ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
புல்லாவெளி-முள்ளியான் பகுதிகளில் நடந்த மோதல்களின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரது சடலங்களில் 29 சடலங்கள் நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரதிநிதி திரு: பிறட்றிக்கிடம் ஒப்படைக்கப்பட்டன

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் இச்சடலங்களை கோண்டாவிலில் வைத்து கையளித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## பற்றறிகள் வழங்கி உதவுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
பற்றறி வழங்கி உதவுமாறு பொதுமக்களிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் போர் புரிவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)
"விடுதலைப் புலிகளுடன் இராணுவம் யுத்தம் செய்வதை சிங்கள மக்கள் தற்போது விரும்பவில்லை. தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடாத்தி ஒரு நிரந்தரமான தீர்வை காணும்படி அவர்கள் அரசை வற்புறுத்தி வருகின்றார்கள்."

கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்தில் 29 இராணுவத்தினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்த பின்பு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்

(4 ம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் வங்கிகள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரிலுள்ள வங்கிகள் அனைத்தும் இன்று முதல் மீண்டும் இயங்கவுள்ளன

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நாஷனல் வங்கி ஆகியன இன்று முதல் காலை 9-30 மணி தொடக்கம் 10-30 மணி வரை பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்திருக்குமென மேற்படி வங்கிகளின் அதிகாரிகள் தெரிவித்தனர் [வி]

## ★ சிப்பாய்களை மீட்க இயலவில்லை
## கொழும்பில் அதிகாரிகள் கவலை

(கொழும்பு)
ஆனையிறவு முகாமினுள் விடுதலைபுலிகளால் முற்றுகையிடப்பட்டுள்ள 850 இராணுவத்தினரையும் மீட்க இயலவில்லையென கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு முகாமை நோக்கி செல்லும் ராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியுள்ளதாலும், முன்னேறும் முயற்ச்சி தடைப்பட்டுள்ளதாலும் ஆனையிறவு முகாமினுள் சிக்கியிருக்கும் 850 ராணுவத்தினரை மீட்க இயலாது உள்ளதாக தெரிவித்தார். [பூ]

## படை தகவல் பரிமாற்றம் புலிகளுக்கு கிடைக்கிறது

(கொழும்பு)
வடபகுதியில் போரிட்டுவரும் படையினரின் தகவல் பரிமாற்றங்களை விடுதலைப்புலிகள் ஒற்றுக்கேட்டு வருவதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் பாவனையில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள்
### இராணுவ உயர் அதிகாரி அச்சம்

(புதுடில்லி)
விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக முதல் முறையாக விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர் என்று சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனையிறவுப்பகுதியில் இடம்பெற்று வரும் கடும் மோதல் குறித்து பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக அகில இந்திய வானொலி

(4ம் பக்கம் பார்க்க)

## கல்முனை அகதிமுகாமில் தீ!
## ஐவர் உடல் கருகிப் பலி

(மட்டக்களப்பு)
கல்முனையில் தமிழர் தங்கியிருக்கும் அகதிகள் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐவர் உடல்கருகிப் பலியானார்கள்;

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கொள்வனவு

பாவித்த மரத் தளபாடங்கள், ஸ்ரீல் தளபாடங்கள், மெத்தைகள், கட்டில்கள், அலுமாரிகள் அனைத்தும் கொள்வனவு செய்யப்படும். விரும்புவோர் நேரடியாக வேலை நாட்களில் 9 மணி தொடக்கம் 12 மணிவரை தொடர்பு கொள்ளவும். இல. 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-5022)

### ஆதரவு தேவை

பாவித்த எஸ்-லோன் குழாய், வாளி, கூரைத்தகடு, பழைய சிறு கதவு. பூஞ்சாடிகள், ஒரேவித போத்தல்கள், அரிய மூலிகை நாற்றுக்கள் சித்தவைத்திய துறை வளர்ச்சிக்கு அன்பளிப்புச் செய்யுமாறு வேண்டுகிறேன். உங்கள் அன்பளிப்புக்களை நேரில் வந்து பெற்றுக்கொள்வோம். டாக்டர் முத்துக்கிருஷ்ணர், சுவாமிநாதர், நாகம்ஸ்வியூ ஒழுங்கை சுன்னாகம், (A-1454)

### மூலிகை ஔஷத உற்பத்தி

நீண்டகால மருத்துவ ஆய்வுகளை நிறைவுசெய்ய, மூலிகை வளம், ஔஷத உற்பத்தியாளர்கள் எமக்குத் தேவைப்படும் பாவித்த கூரைத்தகடுகள் ஒன்றையேனும், பூஞ்செடி வாளி, சிறுயன், கற்பூரவள்ளி, மூலிகை வித்து அல்லது பட்டையாகவோ தந்துதவுமாறு சித்தவைத்தியர்களையும். சித்தவைத்தியத்துறை மாணவர்களையும் கோருகிறேன். டாக்டர் மு. சுவாமிநாதர், முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம். (எ-1453)

## சிற்றுண்டிகள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

சுண்டுக்குளியில் செயல்பட்டுவரும் திருவாசகம்சுவாமிகள் தொண்டர்சபை நிர்வாகத்தினர் ஆனையிறவு போரில் முற்றுமுழுதாகத் தம்மை அர்ப்பணித்து போராடிவரும் போராளிகளுக்கு சிற்றுண்டி, இளநீர், சாக்குகள் சேகரித்து பாஷையூர் சிற்றூரவையிடம் ஒப்படைத்துள்ளனர். (154)

## மருந்து தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இங்கு தினமும் நூற்றுக் கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற வந்தவண்ணமுள்ளனர். வார்ட்டுகளிலும் அதிகமான நோயாளர்கள் தங்கிச் சிகிச்சைபெறுகின்றனர். (72)

## இராசி பலன்

**24 - 07 - 1991**
**(தமிழ் திகதி ஆடி 08)**
**புதன்கிழமை**

திரயோதசி மு. இ. 8-20 வரை, மூலம் மு. இ. 8-35 வரை, மரணயோகம், பிரதோச விரதம், இராகுகாலம் பகல் 12-02 முதல் 1-32வரை, சுபநேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை.

மேடம்: முதியோர் நட்பு, தொழில் கஸ்டம், குடும்பச் செலவு.

இடபம்: சிறுகாயம், மனைவியுடன் பகை, காரியத்தடை.

மிதுனம்: புதியஸ்தானம், தொழில் மகிழ்ச்சி, குடும்ப பாசம்.

கடகம்; விருந்தோம்பல், உறவினர் வருகை, பணவரவு.

சிங்கம்: வாக்குக்கலகம், தொழில் நஸ்டம், கண் துடைப்பு.

கன்னி: தொழில் கேடு, அமைதியான போக்கு, புத்திரர் கவலை.

துலாம்: பாராட்டு, கல்வியியல் புலமை, குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: தடுமாற்றம், கூடா நட்பு, வியாகியானம்.

தனுசு; தொழில் சிறப்பு, விரும்பியதை அடைதல், புலனடக்கம்.

மகரம்: உடல் உபாதை, அவசர பயணம், தொழில் நஸ்டம்.

கும்பம்: புதிய முதலீடு, சொத்துச் சேருதல், காரிய வெற்றி.

மீனம்: வாக்கு வன்மை, அதிகாரிகள் பாராட்டு, மன நிறைவு.

- ஜோஸ்யர்

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

 

| எஸ்.சரவணமுத்து | எஸ்.கலாபரமேஸ்வரன் |
|---|---|
| தோற்றம்: 19-04-1901 | தோற்றம்: 02-08-1944 |
| மறைவு: 24-07-1983 | மறைவு; 24-07-1983 |

திதி: 26-07-1991

தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

| | |
|---|---|
| மனைவி, மக்கள், | மனைவி, மக்கள், |
| மருமக்கள், | தந்தை, சகோதரர்கள், |
| பேரப்பிள்ளைகள். | மைத்துனர், மைத்துனியர். |

'இலக்குமிபதி'
பலாலி வீதி, திருநெல்வேலி. (சி 5016)

## யாழ்.தொழில் நுட்பகல்லூரி
# இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் சகல போதனைகளும் இன்று 24ம் திகதிபுதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகி வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறும்.

இந்த முடிவு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அதிபர், உப-அதிபர், நிரந்தரப் பணியாளர்கள், விரிவுரையாளர்கள், பகுதிநேர விரிவுரையாளர்கள் அனைவரும் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

ஆகவே மாணவர்கள் வகுப்பிற்கு சமூகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஆங்கில ஆசிரியருக்கு
# பயிற்சி வகுப்புகள்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பயிற்றப்படாத ஆங்கில ஆசிரியர்களுக்கு விரைவில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சிப் பிரிவு பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவதாகவும் பேராதனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இப்பயிற்சிகள் இம்மாதம் 21ம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு முதற் கட்டமாக 250 ஆசிரிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ் ஆண்டில் மட்டும் நான்கு தடவைகள் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## சம்பளப்படிவம் தட்டுப்பாடு

[வட்டுக்கோட்டை]

ஆசிரியர்கள் மாதந்தோறும் சம்பளம் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் சம்பளப் பத்திரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (139)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வீடொன்றில் பூட்டப்பட்டிருந்த புதிய 'லுமாலா' சைக்கிள் திருடப்பட்டுள்ளது கடந்த 21ம்திகதி நண்பகல் பொ. சிவபாலன் என்பவரது சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது.

## உணவுப் பொதிகள்

[வடமராட்சி]

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர்சங்கம் ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி போன்ற பகுதிகளில் போராடும் போராளிகளுக்கு உணவுப் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி சங்கம், குளுக்கோஸ், வடை, முறுக்கு, எள்ளு உருண்டை, மிக்சர், பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களை வடமராட்சிப் பிரதேசக்காரியாலயம்ஊடாக அனுப்பிவைத்துள்ளது. (51)

## களப்பலியான
# வீரவேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

(கிளிநொச்சி)

ஆனையிறவிலும், கட்டைக் காட்டிலும் வீரமரணம் எய்திய போராளிகளுக்கு கிளிநொச்சி ஜெயந்திநகர், உருத்திரபுரம் முதலான இடங்களில் பெரும் திரளான பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்கள்.

யூலியட் மரியதாஸ் அனுசுயா (ஜெயந்திநகர்) அருளம்பலம் றஞ்சனி (உருத்திரபுரம்), மாரிமுத்து தயாநிதி (குருகுருகுலம் ஆகியோருக்கும் மக்கள் மலர் அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் தெரிவித்தனர்.

இதன் பின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு மாவீரர் மயானத்தில் பூரண மரியாதைகளுடன் தீயுடன் சங்கமமாகின. (83)

## வீதிப் போக்குவரத்திற்கு ஒத்துழைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது போராட்டத்தின் முக்கிய கட்டமாக ஆனையிறவு மீட்புப் போர் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள வீதிப் போக்குவரத்துத் தேவைகளுக்கு உங்களது ஒத்துழைப்பையும், ஒத்தாசைகளையும் கோரியபோது நீங்கள் தந்த ஆதரவு எம்மால் என்றுமே மறுக்கமுடியாதது.

தமிழீழ மக்கள் அனைவரும் இந்தப் போர் தமது சொந்தப் போர் என உணர்ந்து நாம் கேட்கும் உதவிகளையும், ஒத்துழைப்பையும் தருவதோடு மட்டுமல்லாது நீங்களும் தாமாக முன்வந்து பல உதவிகளைப்புரிந்துள்ளீர்கள். இதற்கு எமது பங்களிப்பினை தெரிவிப்பது எமது தலையாய கடமையாகும்.

இவ்வாறு 'தமிழீழ காவல் துறையினர் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலுல் தெரிவிக்கையில்:-

தொடர்ந்து நடைபெறும் இவ்வுக்கிரப் போரில் எமது போராளிகளின் தேவைகளை மனதில் கொண்டு தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினர் பிரதான வீதிகள் பலவற்றில் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக்களைப் பலப்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு உதவியாக சாரணர் பிரிவு, சென்.ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவு ஆகியன இணைந்து செயல்படுகின்றன. வீதியில் எமது போராளிகளின் வாகனங்கள் வரும்பொழுது இவர்கள் தமது சைகைகளை ஊதுகுழல் மூலமோ அல்லது கைகளினாலோ காட்டுவதனுல் பொதுமக்களனைவரும் வீதியில் ஓரமாகஒதுங்கி நின்றுவரும் வாகனங்களுக்கு இடையூறு எதுவும் ஏற்படுத்தாது விட்டுக்கொடுத்துப்பின் உங்கள் பயணத்தைத் தொடரவும்.

இன்று குடாநாட்டின் சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. வீதிப்போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ள பாதையில் கூட மாணவர்கள் செல்லவேண்டியுள்ளனர். அதேசமயம் இயக்க உறுப்பினர்கள் செல்லும் வாகனங்களும் தங்குதடையின்றி இலகுவாகச் செல்லவேண்டியுள்ளது. எனவே எல்லோரினதும் நன்மைகளை மனதில் கொண்டு பாடசாலை செல்லும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது மிக ஓரமாகச் செல்லவும். கூட்டமாகச் சென்று வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள்.

எதிரியுடன் யுத்தமுனையில் போரிடும் உங்கள் சகோதர, சகோதரிகள் காயப்பட நேர்ந்தால். அல்லது அவர்களுக்குத் தேவைகள் ஏதும் ஏற்படின் அவர்களுக்கு உதவிசெய்யும் நோக்கோடு வாகனங்கள் மிக வேகமாக வரலாம். அவ்வேளைகளில் நீங்கள் வீதியோரமாக ஒதுங்கி நின்று வழிவிட்டுக் கொடுத்தபின் உங்கள் பயணத்தைத் தொடரவும்.

சேவையில் ஈடுபட்டிருக்கும் காவல் துறை போக்குவரத்துப் பிரிவினர், சாரணர்கள், சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவினர், பெரியோர்கள் அனைவருக்கும் தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

## புதிய கிளை

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்புப் பகுதியில் வசித்து வரும் வலி-வடக்கைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு வசதியாக பண்டத்தரிப்பில் புதிய கிளையொன்றை அண்மையில் திறந்துள்ளது. (72)

## படிவங்களுக்குத் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் பெரும்பாலான கிராமசேவகர்களிடம் நற்சாட்சிப்பத்திரம், வதிவிட அத்தாட்சிப்பத்திரம் போன்ற படிவங்கள் இன்மையால் பொதுமக்கள் பாதிப்படைந்துள்ளனர். (54)

## பனந்தொழில்
# வல்லுநர் பயிற்சிநெறி வெற்றியளித்துள்ளது

(பருத்தித்துறை)

தமிழீழ ஆய்வு நிறுவனம் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபை யாழ்.மாவட்ட தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்பன இணைந்து நடாத்திவரும் பனந்தொழில் வல்லுநர் பயிற்சி நெறி வெற்றிபெற்றுள்ளதாக பனந்தொழில்வல்லுநர்பயிற்சி பணியகம் அறிவித்துள்ளது.

இப்பனந்தொழில் வல்லுநர்களுக்கான பயிற்சிகள் குடத்தனை, வலிக்கண்டிஎன்னுமிடத்தில் முகாம் அமைத்து நடைபெற்று வருகின்றது.

தற்போதுஇப்பனந்தொழில் வல்லுநர்பயிற்சியாளர்களுக்கு அல்வாய் பனஞ்சீனித்தொழில் சாலையில், பனம்பாகு, பனஞ்சீனி, பனை வெல்லம் தயாரிப்பு பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பனந்தொழில் வல்லுநர் பயிற்சியாளர்களில் தகுதியானவர்களுக்கு நிரந்தர தொழில் வசதிகளை வழங்குவதற்கும் பயிற்சிப் பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52]

## வீர வேங்கைகளின்

# மன உறுதியே எமது ஆயுதம் அதனால்தான் வெல்கிறோம்

[யாழ்ப்பாணம்]

வீரவேங்கைகளின் மனஉறுதியே எம்மிடமுள்ள ஆயுதங்கள். அதனால் நாம் வெற்றி கொள்கிறோம் என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

பண்டத்தரிப்பில் நேற்று நடைபெற்ற வீரமரணமடைந்த புலிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அங்கு பேசுகையில்; ''வீரமரணங்கள் சோக நிகழ்வல்ல; வீரவரவரலாற்றின் காவியங்கள் என்றும் தெரிவித்தார்

குகதாஸ் மாஸ்ரர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மூத்த உறுப்பினரான தேவண்ணா, மகளிர் பிரிவு

## புலிகள் பிரமுகர் பரா அஞ்சலியுரை

பொறுப்பாளர் ஜெயா உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

இவ் அஞ்சலி நிகழ்ச்சியில் பெரும்தொகையான மக்கள் கலந்துகொண்டு வீரமரணமடைந்த புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

## இலங்கைத் தமிழர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் பொலிஸில்பதிவுசெய்துகொள்ளாததினால் கைது செய்யப்பட்டு இதற்கென அமைக்கப்பட்டுவரும் தனி அகதி முகாம்களில் காவலில் வைக்கப்பட்டு வருகிறார்கள்.

சென்னையில் நேற்றும் 36 பேர் கைதாகினர். இவர்களுடன் சேர்த்து 136 பேர் இதுவரை கைதாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் இரண்டு தனி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை நகரில் அகதி முகாம்களுக்கு வெளியேசுமார் 10 ஆயிரம் இலங்கைத்தமிழர்கள் இருப்பதாகவும், இதுவரை 5 ஆயிரம் பேர் மாத்திரம் தங்கள் பெயர்களை பொலிஸில் பதிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (பூ)

## பொன்னாலை கூ. ச. கிளை மூடப்பட்டது

(சித்தன்கேணி)

பொன்னாலையிலுள்ள சங்கானை ப. நோ. கூ. ச கிளை தற்போது மூடப்பட்டுள்ளது

சங்கானை ப. நோ. கூ. ச. பொன்னாலை கிளை தற்போது மூடப்பட்டு தொல்புரத்தில் இயங்கிவருகின்றது. (137)

## சங்கீதசபை வைர விழா

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை சங்கீத சபையின் வைர விழா அண்மையில் நடைபெறவிருக்கிறது.

சபை ஆரம்பத்திலிருந்து (தரம் 6) ஆசிரியதரத்தில்சித்தியடைந்தவர்கள் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

சித்திஎய்திய சகலரும் இளைப்பாறி இருந்தாலும் இம்மாதம் 24-ம் திகதிக்கு முன்பு யாழ். கல்வித் திணைக்களத்தில் உள்ள வட இலங்கை சங்கீத சபையுடன் தொடர்புகொள்ளலாம். [152]

## சிப்பாயின் சம்பளம் 4,000 ரூபா

(யாழ்ப்பாணம்]

இலங்கை இராணுவ சிப்பாய் ஒருவருக்கு அரசு தற்போது நாலாயிரம் ரூபாவரை சம்பளமாக வழங்கிவருகிறது. நேற்று முன்தினம் கட்டைக் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரின் காற்சட்டைப் பைக்குள் அவரின் சம்பள வவுச்சர் இருக்கக் காணப்பட்டது

காமினி சரத்குமார என்ற இராணுவச் சிப்பாயின் மூன்றும் மாதத்திற்குரிய 3530 ரூபா சம்பள வவுச்சரும், நாலாம் மாதத்துக்குரிய நலாயிரம் ரூபா சம்பள வவுச்சரும் இருக்கக் காணப்பட்டன. [வி]

## இனப்பிரச்னைக்கு தீர்வாக

# ஜே. ஆர்.-ராஜீவ் உடன்பாட்டை இந்தியா கடைப்பிடிக்கும்

[புதுடில்லி]

இலங்கை-இந்திய ஒப்பந்தம் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக சாத்தியமாகக் கூடிய ஓர் அடிப்படையாகவும் கட்டமைப்பிற்கும் தொடர்ந்தும் உதவுமென இந்தியஅரசு அறிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையை இந்தியா ஏற்று நடந்துவருவதாகவும், இதனையே இந்தியா தொடர்ந்தும் கடைப்பிடிக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

கல்விப்பொதுத் தராதர உயர்தர 1991க் கானபரீட்சை பற்றி கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தோடு பலதடவை தொடர்பு கொண்டும், அங்கிருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை,

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு இலங்கையடங்கிலும் பரீட்சைத் திணைக்களம் அனுமதி அட்டைகள் அனுப்பி வைத்திருப்பதாக அறிவித்த போதிலும், வடகிழக்கில் பரீட்சைபற்றி எந்த விதமான கருத்தும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு ஜூலை மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவுகள், வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு இன்னும் அனுப்பிவைக்கவில்லை.

எனினும் யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தின் முயற்சியால் வேறு திணைக்களங்களிலிருந்து பெற்று, உரிய காலத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (152)

## ★ தினமும்

# நூற்றுக்கும் மேல் குண்டுகள் யுத்தமுனையில் வீசப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு - கட்டைக்காடு வெற்றிலைக்கேணி யுத்த முனையில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட குண்டுகளை விமானங்கள் வீசி வருகின்றன.

இதைவிட மக்கள் குடியிருப்புகள் மீதும், காட்டுப் பகுதிகளை நோக்கியும் தினமும் பல குண்டுகளை விமானங்கள் வீசி வருகின்றன.

யுத்தமுனையை அண்டிய பகுதிகளில்உள்ள பல வீடுகள், கட்டிடங்கள். கடைகள்மீதும் விமானங்கள் குண்டுவீசிவருகின்றன. (சி)

## போர்க்கால பணியில் பயிலுநர் ஆசிரியர்

[பருத்தித்துறை]

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தற்போது மிக அவசரமாகத் தேவைப்படும் சாக்குகள், உரப்பைகள் என்பனவற்றைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. கே. ஸ்ரீசந்திரா சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளார்.

பயிலுநர் ஆசிரியர்களால் சேகரிக்கப்பட்ட சாக்குகள், உரப்பைகளை அவ்வப்பகுதி சிற்றூரவைகளிடமோ அல்லது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச காரியாலயத்திலோ உடனடியாகக் கையளிக்குமாறும் வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (52)

# ஜனதாதள்கட்சியில் உட்கட்சிப் போர்

[புதுடில்லி]

ஜனதாதள் கட்சிக்குள் மீண்டும் உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. கட்சியின் செயற்பாடு குறித்து முக்கிய தலைவர் திரு. அஜித் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜனதாதள் கட்சி அலுவலர்களை நியமித்திருப்பது குறித்து குறைகூறியுள்ள திரு. அஜித் சிங், இந்த நியமனங்கள் கோஷ்டி அடிப்படையிலானவை, ஒருதரப்பிலானதென்றும் அவர் வர்ணித்துள்ளார்.

கட்சித் தலைமை கட்சிசெயல்படும் முறையை மாற்றுவிடின் தாம் 'லோக்தள்' கட்சிக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க வேண்டி வருமெனவும் அவர் எச்சரித்துள்ளார். (சி)

# சிங்கள மீனவருக்கு அமைச்சு உதவி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மீனவர்களுக்கு உதவும் வகையில் விரிவான திட்டங்களை கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் பிரகாரம் திருமலை மாவட்டத்திலுள்ள சிறிமாபுர, விஜிதபுர, நடராஜவத்தை, மகாமாஜபுர ஆகிய இடங்களிலுள்ள சிங்கள மீனவர்களுக்கு மீன்பிடி இழுவைப்படகுகள், படகு இயந்திரங்கள், மற்றும் மீன்பிடி உபகரணங்கள்ஆகியன அமைச்சினால் வழங்கப்படவுள்ளன.

## பெயர் மாற்றம்

(சென்னை)

தமிழகத்தில்அண்ணா மாவட்டம் என இதுவரை அழைக்கப்பட்டு வந்த மாவட்டத்தை திண்டுக்கல் மாவட்டம் என தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா பெயர் மாற்றம் செய்துள்ளார். (வி)

## காயமடைந்த பெண் பலி

(சென்னை]

சென்னை சட்டக் கல்லூரி விடுதி வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட குண்டு வெடிப்பில் படுகாயமுற்ற பெண் நேற்று முன்தினம் மரணமானார்.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 5 பேருக்கு தொடர்பு இருப்பதாகவும் இதுவரை இருவர் கைதாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். [பூ]

## சாரணர் காரியாலயம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சாரணர் காரியாலயம் பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் மாவட்ட ஆணையாளர் திரு. ஆ. சுப்பிரமணியம் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. (154)

## பயிற்சிக்காலம் நீடிப்பு

(உடுவில்]

தேசிய இளைஞர் சேவைகள் சபையால் இணைந்து பயிற்சி பெற்றுவரும் தமிழ் மொழி ஆசிரியர்களின் பயிற்சிக்காலம் மேலும் ஒரு வருடகாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கல்விச்சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள 91/11 சுற்று நிருபத்திற்கமைய மூன்று வருட காலம் முடிவடையும் திகதியில் இருந்து மேலும் ஒருவருடகாலத்துக்கு பயிற்சிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## படை முன்னேற முடியாமல் தத்தளிப்பதாக அதிகாரி தகவல்

[புதுடில்லி]

ஆனையிறவுமுகாமை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா படையினர் முன்னேற முடியாமல் தத்தளிப்பதாக இலங்கை அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

பதுங்கு குழிகளை அமைத்து வலுவாக நிலைகொண்டுள்ள போராளிகளின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து அரச படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (பூ)

## இளைப்பாற்று சம்பளம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திலுள்ள தொண்டர்படையினருக்கும் தொண்டர் படை அதிகாரிகளுக்கும் இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவதென அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் யோசனையைத் தொடர்ந்து இந்த இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவதை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (153)

## சுகாதார பயிற்சி

[உடுவில்]

இணுவில் ஆஸ்பத்திரியில் தற்காலிகமாக இயங்கி வரும் தெல்லிப்பழை சுகாதாரப்பணிமனையில் சுகாதாரப் பயிற்சி வகுப்பொன்றினை யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

சுகாதாரப் பயிற்சியினை பெறுவதற்காக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் ஐம்பது பயிற்சியாளர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர். (109)

## பதிவு செய்யாத ஈழத் தமிழர் பற்றி தமிழக அரசு தீர்மானிக்கும்

(சென்னை)

பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துவதா இல்லையா என்பது பற்றி தமிழக அரசு தான் முடிவுசெய்ய வேண்டும். எனினும் சம்பந்தப்பட்ட இலங்கைத் தமிழர்கள் விடயம் குறிந்து நான் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்தார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தும் அநேகமானோர் இன்னும் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவில்லை. இவர்கள் நிலை குறித்து தமிழக அரசு தான் முடிவு எடுக்க வேண்டும். எனினும் தமிழக முதல்வருடன் இதுவிடயமாக நான் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வேன் என்றார்.

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா, மன்னார் பகுதிகளில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [க]

## விமானத் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்று நண்பகல் முதல் தொடர்ச்சியான விமானதாக்குதலும் ஹெலியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களும் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. (க)

## 8 மாவீரர்களுக்கு மல்லாகத்தில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கடந்த 22ம் திகதி கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் வீரமரணமடைந்த எட்டு வீர வேங்கைகளின் புகழுடல்கள் மக்களின் அஞ்சலிக்காக நேற்று மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் வைக்கப்பட்டன.

பெருந்தொகையான மக்கள் தமது இறுதி அஞ்சலியை மறைந்த மாவீரர்களுக்கு செலுத்தினார்கள்.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முன்னணிப் பிரமுகர் பரா, ஆர்த்தி, தனபால், ரஞ்சன் மாஸ்டர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

அஞ்சலியுரையை அடுத்து மாவீரர்களின் புகழுடல்கள் இராணுவ மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

வில்சன் [வேலுப்பிள்ளை சந்திரகுமார், சங்கானை], விசயன் [வேலுப்பிள்ளை மாரிமுத்து கண்டி), மணிவாசகன் (கணேசநாதன் ஜனார்த்தனன், இணுவில்], பட்சன் (சீனியர் உதயராசா, புன்னாலைக்கட்டுவன்), கைபிலன் [அரியரட்ணம் துஷ்யந்தன், வட்டுக்கோட்டை), பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ணகுமார், பண்டத்தரிப்பு), அறிவொளி (ஸ்ரீபத்மநாதன் சத்தியசீலன், சுண்டுக்குளி], சிவானி [சண்முகநாதன் ரோகினி கொக்குவில்].

## 500 ஈழத் தமிழர் பொலிஸ் விசாரணையில்

(சென்னை)

தமிழகத்திலுள்ள 500 இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகை தகவல் வெளியிட்டது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; தமிழக அரசின் கட்டளைக்கு அமைய தமது பெயர் மற்றும்விபரங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்களே விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சாரணருக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

பளை மகாவித்தியாசாலை சாரணர்கள் அனைவரும் இன்று காலை 9-00 மணிக்கு பளை வைத்தியசாலையில் சமுகம் கொடுக்கும்படி சாரணர்தலைவரால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## போர்க்கால கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் போர்க்கால செயல்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளி காலை 10-00 மணிக்கு வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் இக்கலந்துரையாடலில் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### 101 படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யானதாகவும் பாதுகாப்புவட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளையில் ஆனையிறவுப்பகுதியில் இரு பகுதியினருக்கும் இடையில்நடைபெற்ற உக்கிர மோதல்கள் குறைவடைந்து நேற்று சற்றுமந்தநிலை காணப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### மக்கள் பார்வைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் சடலங்களில் 26 சடலங்கள் மட்டும் நேற்று பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 9-30 மணி தொடக்கம் முத்திரைச் சந்தையில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மேற்படி இராணுவத்தினரின் சிதைந்த சடலங்களை பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் நீண்ட வரிசையில் நின்று பார்வையிட்டார்கள்.

இராணுவத்தின் சடலங்கள் அனைத்தும் பொலித்தின் பைகளில் சுற்றப்பட்டு பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன இராணுவத்தினரின் சடலங்கள் பல பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டன. [வி]

## சென். ஜோன் அம்புலன்ஸ் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச ஆணையாளருக்குட்பட்ட சகல சென். ஜோன்ஸ் (அம்புலன்ஸ் அங்கத்தவர்களும் தற்போது பயிற்சி பெற்றுவருபவர்களும் நாளை வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்

### ஆனையிறவு நிலைமை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது கணவன்மாருக்கு என்னநடந்தது, அவர்கள் தற்போது எங்கிருக்கின்றார்கள், அவர்களைப் பற்றிய முழு விபரங்களையும் தெரிவிக்கும்படி கையில் குழந்தைகளை ஏந்திய வண்ணம் பெண்கள் கதறி அழுததாகவும், தமது பிள்ளைகளின் சடலத்தையாவது தம்மிடம் ஒப்படைக்கும்படி பெற்றோர் கோஷமிட்டதாகவும், வேறு சிலர் போர்நிறுத்தத்தை உடன்செய்து, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறும் கூக்குரலிட்டார்களாம்.

இவ் ஆர்ப்பாட்டக்காரர்களை ஜனாதிபதி மாளிகைஉத்தியோகஸ்தர்கள் கட்டுப்படுத்த முடியாததினால், அவ்விடத்துக்கு பொலிசார் வரவழைக்கப்பட்டு தடியடிப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

இதேபோன்ற மக்கள் கூட்டமொன்று, இராணுவ தலைமைச் செயலகத்தின் முன்னாலும் தமது பிள்ளைகளின் நிலையைத் தெரிவிக்கும்படி அழுத வண்ணம் நிற்பதாகவும் கூறப்படுகின்றது.

கொழும்பைச் சுற்றியுள்ள வத்தளை, ஹெந்தளை, கந்தானை போன்ற இடங்களிலிருந்தும் மற்றும் சிங்கள கிராமப்புறங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கொழும்புக்கு படையெடுத்து வந்து இந்த ஆர்ப்பாட்டத்தைநடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் வீடுகளுக்குச் சென்றதாகவும், சிலர் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறியதாகவும், வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலிருப்பதால் அவர்களின் இருப்பிடங்களைத் தேடி மக்கள் அலைந்து திரிவதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு, ரத்மலானை விமான நிலையப் பகுதியிலும் பெரும்திரளான மக்கள் கூடி நின்று இராணுவ அம்புலன்ஸ் வண்டிகளைத் தினமும் அவதானித்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## கட்டைக்காடு பகுதியில் தொடர்ந்து விமானத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, கட்டைக்காட்டுப் பகுதிகளில் நேற்று பிற்பகல் வரை விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கு மிடையில் மோதல்கள் நடைபெற போதிலும் விமானத்தாக்குதல்கள் நடைபெற்று வருவதாகவும் புல்லாவெளி அர்ச். செபஸ்தியார் தேவாலயப் பகுதிகளிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடுத்து பெரும் உயிர்சேதம் விளைவித்த பின்பு இராணுவத்தினர் பின்வாங்கி தற்போது தமது பழைய இடங்களிலேயே நிலைகொண்டிருப்பதாகவும்அங்கிருந்து வரும் செய்திகள் தெ[illegible]விக்கின்றன. [வி]

### புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் ராஜன் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ராஜன் மேலும் பேசுகையில், ''ஆனையிறவு மோதலில் இதுவரை 12 இராணுவத்தினரே பலியாகியுள்ளதாக இலங்கை அரசு சிங்கள மக்களையும் உலகத்தையும்ஏமாற்றி வருகின்றது. இலங்கை அரசின் அப்பட்டமான பொய் பிரசாரங்களை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே, இன்று நாம் மனிதாபிமான முறையில் இராணுவத்தினரின் சடலங்களை ஒப்படைத்துள்ளோம்.

இராணுவத்தினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக நாம் கையளிப்பது இது நான்காவது தடவை என்றும் திரு. ராஜன் தெரிவித்தார். ([illegible])

### பற்றறிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''எமது அவசர பாவனைக்கு அவசியமாக பெரிய சிறிய பற்றறிகள் தேவைப்படுகின்றது. எனவே பொதுமக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் இப்பற்றறிகளை அருகில் உள்ள எமது செயலகங்களில் கொடுத்துதவுவதுடன் மேலும் அதிக அளவிலான மண்வெட்டிகள், சாக்கு, பிக்கான், உரப்பை, சணல் போன்ற் பொருட்களும் வழங்கி உதவுமாறும் வேண்டுகின்றோம்.''

### விடுதலைப்புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையில் இடம் பெற்றுவரும் கடும்மோதலில் விடுதலைப்புலிகளின் தாக்குதல [illegible]வும் உக்கிரமாக உ[illegible] இதனால் இராணுவத்தினர் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியிலிருந்து முன்னேறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

## புலிகள் தாக்குதலில் தொலைத்தொடர்பு சேதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால்ஆனையிறவு முகாமிலுள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள் யாவும் சேதமடைந்திருக்கலாம் என்பதை கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று ஒப்புக்கொண்டார்.

ஆனையிறவு போர் குறித்து பத்திரிகையாளர் கேட்ட கேள்வியின் போதே அந்த அதிகாரி இதனை ஒப்புக்கொண்டார். [153]

## வடபகுதி செல்வதற்கு வாகனங்களுக்கு தடை

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்வதற்கு வாகனத்திற்கு அனுமதி கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அமுலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்ட போதிலும் கொழும்பு மற்றும் இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆனையிறவுடனான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

ஆனையிறவில் நடைபெறும் போர் சம்பந்தமான தகவல்கள் பெறமுடியாத சூழ்நிலையால் பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்களின் கேள்விக்கு மேற்படி யுத்தம் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கமுடியாதநிலை ஏற்பட்டதாக இராணுவ பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஆனையிறவுப்பகுதிகளில் வட்டமிடும் ஹெலிக்கொப்டர்கள், பொம்பர்கள், அவ்ரோக்கள் ஆகியவற்றுடனும் ஆனையிறவு முாாமினுள் முடங்கி இருக்கும் படையினருக்கு தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி படையினருடனும் ஆனையிறவு முகாமினுள் முடங்கியிருக்கும் படையினருக்கு எந்தவித தொடர்பையும் ஏற்படுத்த முடியவில்லையாம்.

இதேவேளை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் கொழும்பு தலைமைப் பீடத்துக்கும் எதுவித தொடர்பும் ஏற்படுத்த முடியவில்லை என்றும் அந்தப்பேச்சாளர் தெரிவித்தார். (153)

### 29 இராணுவ

(1-ம் பககத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்படி சடலங்களை தமது சின்னங்கள் பொறித்த மூன்று லொறிகளில் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை துறைமுகத்துக்குக் கொண்டு சென்று கடலில் தரித்து நின்ற கப்பல் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (வி)

### கல்முனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

15 பேர் பலத்தஎரிகாயங்களுக்குள்ளானார்கள்.

சுமார் 3,000 அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலை ஒன்றின் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பல கூடாரங்கள் தீயினால் முற்றாக எரிந்து சாம்பராயின.

இத் தீவிபத்திற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தற்போது பாதிக்கப்பட்டவர்கள் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். (சி)

### படை தகவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளிடம் சக்தி வாய்ந்த வானொலி தொடர்பு கருவிகள் இருப்பதாகவும், இதனால் போரிடும் ராணுவத்தினர் பேசிக்கொள்வதையும், கசிய தகவல்கள் பரிமாறிக் கொள்வதையும் அவர்களால் சர்வ சாதாரணமாக ஒற்றுக் கேட்க முடிகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால் முக்கிய விடயங்கள், செய்திகளை அவர்கள் முன்கூட்டியே அறிந்து கொள்கிறார்கள் என்றும் அவர் கூறினார். (பூ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180386/81